# திராவிட நாடு

மலர் 2, இதழ் 38

December 5, 1943

Record no. 1005

ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

# திராவிடநாடு

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0 0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 2 | காஞ்சிபுரம் 5—12—43 சுபானு கார்த்திகை 20—ஞாயிறு | இதழ் 38.

நே—5. தோழர் கலியாண சுந்தரனுக்கு

## கைவல்யம் கடிதம்.

★

"எங்கள் பாஷையில்—எங்களுக்குத் தெரிந்த பாஷையில் பாட்டுப் பாடுங்கள், அப்பொழுதுதான் எங்களுக்குப் பாட்டு அர்த்தமாகும்" என்றார்கள்; இதில் தப்பு என்ன? இதில் என்ன வகுப்புவாதம்? மற்றப் பாஷைகளில் பாடவேண்டாமென்று சொல்லவும் இல்லை, தடுக்கவும் இல்லை. எங்கள் பாஷையில் பாடினால்தான் சங்கீதம் விளங்குமென்றார்கள். இதற்காக T. T. கிருஷ்ணமாச்சாரியார், சொன்னவர்களை எல்லாம் அடியோடு தொலைக்கவேண்டும், அதற்கு முதலியார்முன்னிற்கவேண்டுமென்றார். தமிழ்ப் பாட்டுப்பாடு என்றதற்கு இதுதான் தண்டனையா? அது அந்தத் தண்டனைக்கு உரியதுதானா? அந்தக் கொடுமையான வார்த்தை எங்கிருந்து உண்டானது? ஏன் உண்டாயிற்று? என்பதை ஆலோசித்தால், பழைய காலத்தில் தமிழ்மக்களைச் சமயத்தின்பேரால் துன்புறுத்தினது ஞாபகத்திற்கு வாராதா? எதும்படிக்கலாம், எதையும் கற்கலாம், எத்தொழிலும் செய்யலாம், எந்தப் பாஷையிலும் பாடலாம் என்கிற ஆங்கில நீதியிலிருக்கும் நாம், நம் பாஷையில் சங்கீதம் வேண்டுமென்று சொன்னால், அதற்காக, அப்படிக்கேட்பவர்களை அடியோடு தொலைக்கவேண்டுமென்று, பிராமண ஒழுக்க ஆசாரமில்லாத ஐயங்கார் சொன்னாரே, அதுவும் தங்களை முன்னிறுத்தி ஏன் சொன்னார்? எதற்காகச் சொன்னார்? சொன்னது நியாயமா? அந்த விஷயங்களை எல்லாம் தங்களிடம் நாங்கள் கேட்டுத் தெரிய வேண்டாமா? தெரிந்துகொள்ளாவிட்டால் எங்கள் பயம் எப்படித்தெளியும்! ஐயங்கார் அவர்கட்கு, அவர்கள் முன்னோர்கள் மனோபாவமும் அடக்குமுறையும் அதையொட்டின பல மமதையுந்தானே கோபமாக ஆங்கிலேய அரசாங்கத்திலும் தோன்றிற்று. அந்தக் கோபத்திற்குச் சாந்தமாகக் கலைவளர்ச்சியும்-ஆத்மக் கலையுணர்ச்சியும் வேண்டுமென்று தாங்களும் சொல்லிவிட்டீர்கள். உங்கள் வித்தைக்கும் புத்திக்கும், இயற்கை அழகு வர்ணனைக்கும் ஒத்த பதிலல்ல. விஷயத்திற்கும் பொருந்தவில்லை. உங்கள்சொந்த ஜனசமுகத்தின் துன்பத்திற்கும், அவமானத்திற்கும் பால்வார்த்ததுபோல் பதிலிருக்கிறது.

எந்த மனித ஜந்துவும் கல்வியால்உண்டாகும் பெருமகிழ்ச்சி பெறுதவண்ணம் எந்தக் காரணத்தைப்பற்றியும் தடுத்தல் எவ்வளவு அசம்பாவிதம்! அந்த அசம்பாவிதந்தானே நம் நாடெல்லாம் பரப்பப்பட்டிருக்கிறது. அந்த அசம்பாவிதத்தைப் போக்கச் சிலர் புறப்பட்டால், அவர்களை அடியோடு தொலைக்க என்று ஆச்சாரியார் சொல்லுவது, அதற்குத்தாங்கள் பல்லைக்காட்டும் பதில் சொல்லுவதுமாக இருந்தால், உலகத்தார் அனைவரும் இக்காலத்தில் நாடிச்செல்லும் அறிவினால் ஒற்றுமைப்படுதல் என்ற பாதை எவ்வளவு கஷ்டமான தூரத்திற்குப்போய்விடுமென்பதை ஆச்சாரியும்தாங்களும்தெரிய வேண்டாமா?

அவனவன் பாஷையில் சங்கீதம் விர்த்தியடைய வேண்டும்; அதற்காக அவனவன் பாஷையில் பாடச்சொன்னாலும், பாடினாலும் உங்களுக்கு என்னய்யா நஷ்டம்! ஆருக்குத்தான் நஷ்டம் என்ன? காதல் காணாமல் போய்விடுமா? கார், மழையாகாதா? காவேரி கரைதட்டிப் பேர்காதா? வாய்க்கால் ஓடாதா? மதகில் நுழையாதா? [illegible] போகாதா? வயலில் பாயாதா? நெல்விளையாதா? பக்கத்தூரைவிட்டுப் பலவூர் போகாதா? அரிசியாகாதா? அதிகலாபம் தேடாதா? இதையெல்லாம் பார்த்துக்கொண்டு இங்கிலீஷ் அதிகாரம் இங்கே இருக்காதா? தெய்வங்களெல்லாம் கோயிலைவிட்டு ஓடியாபோகும்? தமிழ்ப்பாட்டுப் பாடிப் பாடித் தமிழிலே சங்கீதம் வந்துவிட்டால், உலகம் அல்லோல கல்லோலமாகி, ஒன்று சேர்ந்திருக்கும் பஞ்சபூதங்கள் திக்காலுக்கொன்றாய்ப் பிரிந்து வந்த வழியே ஒன்றுக்குள் ஒன்று நுழைந்து எல்லாம் ஒன்றாய், சமுத்திரத்தில் படுத்திருக்கும் விஷ்ணுவின் வயிற்றுக்குள் உட்கார்ந்துவிடுமா? (இதைத்தான் பிரளயம் என்பார்கள்) நீர்மூழ்கிக் கப்பல், ஆகாயக் கப்பல், ஈரோட்டு மின்சாரக்கண்ணி முதலியவைகளின் தொல்லையால் விஷ்ணு சமுத்திரத்தைவிட்டுப் போய்விடுவாரா? பஞ்ச பூதத்திற்குப் படுக்க இடமில்லாமல் போய்விடுமா? எந்தப் பயத்தைக்கொண்டு ஆச்சாரியார் எல்லாரையும் தொலைக்க உங்களையும்கூப்பிடுகிறார்? தமிழ்ப் பாட்டுப் பாடினால் என்ன நஷ்டம் வந்துவிடுமென்பதைக் குறிப்பாக விபரப்படுத்திச் சொல்லிவிட்டால், எல்லாரும் தெரிந்துகொள்வார்கள். அதைவிட்டு, எண்ணத்தால் உண்டாகும் கோபத்தால் இஷ்டம்போல் பிரசங்கம் செய்துவிடுவது, ஆச்சாரியாருக்கும் உங்களுக்கும் சந்தோஷமான கெம்பீரமாக இருந்தாலும், எங்களுக்கு நியாயம் வழங்கினதாகஇல்லை.

உயர்ந்த ஜாதிக்காரர்களுக்கு இனிமையாகத் தோன்றியவைகளைத் தங்கள் சுதந்திரங்களாக வைத்துக்கொண்டு பிறர் அனுபவியாமல் தடுத்துச், சர்வசாதாரணமாக வழங்கத்தக்க உரிமைகளுக்குச் சிறப்புரிமைகள் என்றும், பிறப்புரிமைகள்என்றும் பெயர்சூட்டி, மானுஷீயத்தை அவமானப்படுத்திவந்த ஆச்சாரியார் பரம்பரைக்குத் தாங்கள் பக்கத்துணையாக இருப்பது நியாயவிரோதமட்டுமல்ல; துரோகமுமாகும். ஆச்சாரியாரின் முன்னோர்களின் சரித்திரத்தின் ஒருபகுதிக்கு ஒளிப்பக்கத்தையும், மற்றோர் பகுதிக்கு இருட் பக்கத்தையும் திருப்புகையிலே அசம்பாவிதமும் வகுப்புத்துவேஷமும் உண்டாகிறது. ஆனால், அவர்கள் தமது குணத்தில் ஓரம்சம், மற்றோர்அம்சத்தை வஞ்சிக்கவிடுதல் எக்காலத்திலும் இயலாது என்பதை ஆச்சாரியார் உணரவில்லை. அவர்கள் எத்தனைபலமாகச் சுயநலக்கோட்டைகளைக் கட்டிக்கொண்டு போனாலும், அந்தக்கோட்டைக்குள்பழைய இந்து இராஜாக்களின் செங்கோல்வாழப் போவதுமில்லை, மகாவிஷ்ணுவே இந்து ராஜாக்களாய்ப் பிறக்கிறார்கள். அவர்கள் பிராமணர்களை வணங்கிக்கொண்டே இருக்கிறார்கள், அந்தப் பிராமணர்கள் நாங்கள்தான்; [illegible]

6-ம் பக்கம் பார்க்க.

# ஆள் தேவை!

பரதன்.

## ஆள் தேவை!

**எண்ணிக்கை:—**

எத்தனை ஆயிரம் ஆட்கள் கிடைத்தாலும் வேலை தரப்படும்.

**யோக்யதாம்சம்:—**

அக்கம்பக்கம் பார்த்து, அரவம் கேட்டதும் பதுங்கி, ஆளில்லாச்சமயத்திலே சுறுசுறுப்பாக வேலைசெய்யும் திறமையும் அனுபவமும் வாய்ந்த வாலிபர்கள் தேவை. தமிழ் எழுதத்தெரிந்தால் போதும்.

**வேலைநேரம்:—**

ஊர் அடங்கியதும் ஆரம்பம், கோழி கூவியதும் முடியும்.

**ஓய்வு நேரம்:—**

காலடிச்சத்தமோ, யாரடா அது என்றகுரலோ கேட்கும்போதெல்லாம் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம்.

**கருவி:—**

வேலைக்கு கரித்துண்டு இருந்தால் போதும்.

**கூலி:—**

தற்போது, கைச் செலவுக்குமட்டுமே தரப்படும். கம்பெனி தயாரிக்கும் சரக்கு இலாபத்துக்கு விற்ருல், பிறகு தாராளமாகக் கூலிதரப்படுவதோடு, புதிய வேலையும் தரப்படும்.

**மனு அனுப்புமிடம்:—**

ஆச்சாரியார் அன்கோ, மாம்பலம், சென்னை,

பரதா! இது என்ன விளம்பரமப்பா? ஆச்சாரியார் கம்பெனியா? அதற்கு ஆட்களா? அவர்களுக்குக்கரித்துண்டுகருவியா, கருக்கலிலே வேலையா? காலடிக்குஓய்வா? இது என்ன கதை! என்ன விளம்பரம்! என்று கேட்கும் தோழர்களுக்குக் கூறுகிறேன், உண்மையிலேயே, பலருக்குவழிவகை கிடைக்கட்டுமே என்ற நல்லெண்ணத்துடனே, விவேகமுள்ள ஒருநிபுணர் சமயம் பார்த்துத்துவக்கும் கம்பெனியை உங்கட்கு அறிமுகப்படுத்துகிறேன், நகைச்சுவைக்கல்ல! உங்களுக்கு வேறு வேலைகள் இருக்கும், இந்தப்புதிய கம்பெனிக்குத் தேவையான அனுபவமும் இராது, எனவே உங்கட்கு இந்த விளம்பரம் பயன்தராதிருக்கலாம். ஆனுல், பாவம், பலபேர் இருக்கிருர்கள், இச்சமயம் தவறினுல் மறுசமயம் வாய்ப்பதரிது என்றநிலையிலே. அவர்களுக்காகவே நான் ஆச்சாரியார் கம்பெனியைப்பற்றிச் சில விளக்கம் தெரிவிக்கிறேன். நான்கூறுவது போதவில்லை என்ருல், மேலும் தகவல் தெரிந்துகொள்ள ஜனுப் அல்லாபிச்சை என்ற விலாசத்துக்கு எழுதிக்கேளுங்கள்.

விளங்கக்கூறவேண்டுமா, சரி கேளுங்கள் தோழர்களே! நீங்கள் (நானுந்தான்) ஆச்சாரியாருக்குமூப்புமேலிட்டுவிட்டது, முறுக்குத்தளர்ந்து விட்டது, சலிப்புமிகுந்து விட்டது, சங்கடம் வளர்ந்துவிட்டது, வேலைகுறைந்துவிட்டது, மாலைக்காலமும் மறைந்துவிட்டது, இனி அவரால் ஒன்றுமாகாது, காலியான எரிமலைபோல், வரண்டவட்ட நீர்நிலைபோல் சருகான வாழைபோல், சாறற்றுப் போய்விட்டார் என்று எண்ணிருேம். துப்பாக்கியிலே தோட்டா இல்லை என்று நினைத்தோம். இவ்வளவும் பொய், எனக்கா புத்தி தீட்சண்யம் இல்லை, இதோபார் என் சமர்த்தை, என்று கூறுவதுபோலப், பலமான பக்கமேளத்தோடு, விமரிசையாக ஒருபுதிய கம்பெனியைத் துவக்கியிருக்கிருர், வேலைக்கு ஆட்கள் தேவை என்று விளம்பரம் செய்தும் இருக்கிருர். ஜரூராக நடத்தப்போகிருராம் இந்தக் கம்பெனியை!

ஆச்சாரியார் ஆரம்பித்த கம்பெனிகள் அனந்தமாயிற்றே, தொட்டது துலங்காததால்தானே, தொள்ளாயிரம் ஆரம்பிக்கிருர், அவருடையகம்பெனியிலேவேலைக்கு அமர்ந்தால், நல்லதா, என்று என்னைக் கேட்டுப்பயனில்லை. அவரையே கேட்டுப் பாருங்கள்.

என்ன கம்பெனி? அதற்குக் கரித்துண்டு கருவியா? என்னய்யாவேடிக்கை, என்றுகேட்குமுன், நானே கூறுகிறேன் நண்பர்களே, வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமாமே, அதுபோலக் கரித்துண்டு போதுமாம், இந்தக் கம்பெனி ஆட்களுக்கு! வேலைநேரத்தைப்பற்றிநான் தந்துள்ள குறிப்பு, உங்கட்குக் கொஞ்சம் சந்தேகத்தை உண்டாக்கக்கூடும். ஊரடங்கிக் கோழிகூவுமுன், காலடிச்சத்தம் கேட்டால் ஓய்வெடுத்து, சுற்றுமுற்றும் பார்த்துவேலை செய்வது என்ருல், உங்களின் சூட்சமத்தை உபயோகப்படுத்தி, ஓஹோ! கன்னக்கோல் வேலையா? என்று கேட்காதிர்கள். பஞ்சமா பாதகத்திலே ஒன்ருன களவினைத்தூண்டுவரா, சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார்! கள்ளர்களை அவர் கூப்பிடவில்லை!! பாலர்களை அழைக்கிருர் பரிவுடன், வாலிபர்களைக்கூப்பிடுகிருர் வாஞ்சையுடன், அன்று இராமன் வானரசேனையை வாத்சல்யத்துடன் அழைத்ததுபோல.

"அதுசரி, பரதா! அரசியல் நெருக்கடியைத்தீர்க்க அல்லும் பகலும் பாடுபட்டு, அசுவத்தைத் தேடிக்கொண்டு அரசாங்கத்தாரை அறைகூவி அழைத்துக்கொண்டு, ஆகாகான் அரண்மனைக் கதவினைத் திறக்கத் திருப்பாசுரம்பாடித் திருத்தாளம் போட்டுத்திருத்துழாய்மாலை குலுங்கத் திருத்தாண்டவம் புரிந்துகொண்டு, பாகிஸ்தானை ஆதரிக்கவும் லீகுக்கு லாலிபாடவும், ஜனுப் ஜின்னுவின் புகழ்பற்றி ஜாவளி அமைத்தும், வெளிநாட்டுத் தலைவர்களுக்கு மகஜர் விடுத்தும், தேசியசர்க்காருக்குத் தவங்கிடந்தும் வந்தாரே, அந்த வேலையை விட்டு விட்டு, வேறு கம்பெனி துவக்கிய காரணம் என்ன! என்று கேட்பீரேல், நான் என்ன பதில் கூறுவது தோழர்களே! எட்டடிக் குச்சுக்குள்ளே, முருகய்யா, எத்தனைநாள் இருப்பேன், என்ற தெம்மாங்குபோல, எத்தனை தடவை தான் அவர் புதிய டில்லிக்கும் அலகாபாத்துக்கும், பம்பாய்க்கும் சிம்லாவுக்கும், கால்கடுக்கச் செல்வார், குரல் கடுக்கக் கூவுவார், கைவலிக்க எழுதுவார், பாவம், உழைத்து ஒரு பலனைக் காணேமே என்று சலித்திருந்த சமயத்திலே, சரியானதோர் சமயம் வாய்த்தது, அவருக்கு வேலைகிடைத்தது, நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று, மற்றவரையும் அழைக்கிருர்.

சாமான்யமானதல்ல சார்! நேசநாடுகள் அச்சுநாட்டுக் கொட்டத்தை அடக்கும்போரை எவ்வளவு முக்கியமானது என்று கருதுகின்றனரோ, அவ்வளவு முக்கியமானது நான் ஆரம்பிக்கும் இந்தக் காரியம், என்று, கம்பெனியின் துவக்கவிழாவிலேயே கூறிவிட்டார். என்ன போர்? என்ன வேலை? என்று கேட்கிறீர்கள்; கொஞ்சம் பொறுமை காட்டுங்கள் தோழர்களே, அவசரப் படேல்!

ஆலமரத்தை ஆறுமாதம் சுற்றியும் அடிவயிறு கனக்காதது கண்டவளுக்குக் கவலைபிறந்ததாம்; பார்த்தாள், ஆலமரத்தைச்சுற்றி அலுப்பதைவிட வேலமரத்து விறகொடிப்போம்என்றெண்ணிளைாம். ஓர் நாள், வீடு திரும்பும்போது, கைகாலில் இரத்தக் கீறல்களுடன்வந்து சேர்ந்தாளாம். வேலமரத்து முள்விடுமா சும்மா? அதுபோல ஆச்சாரியார், பதவியைத் தேடித்தேடி அலுத்தார்; இப்போது, புதிய கம்பெனி துவக்கி விட்டார், பலன் வேலமரத்திலே வேலைதேடியவளுக்கு உண்டானதுபோல, நஷ்டக்கணக்காக முடியும்என்றே நான் நினைக்கிறேன். அப்படியொன்றும் நான் நினைப்பது தவருகப் போவதுமில்லை. ஆச்சாரியாரின் வேலைகளும் அவர் போடும்திட்டப்படி நடப்பதில்லை. ஆனுல் இந்த மதுவிலக்குத் திட்டமிருக்கிறதே அதைப் பொறுத்தவரையிலே, ஆச்சாரியாரின் காரியம் திட்டப்படிதான் நிறைவேறியிருக்கிறது. "முழுப்பொய்! அவர் மது

(3ம் பக்கம் பார்க்க)

## ஆள் தேவை!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விலக்குக்குச் சட்டம் செய்தார். அதுதான் இப்போது மட்டந்தட்டிவிட்டார்களே சர்க்கார், நீ அவர்போட்ட திட்டப்படி நடக்கிறது என்று கூறுகிறுயே, என்று என்மீது கோபியாதீர் தோழர்களே, உண்மையிலே, ஆச்சாரியாரின் திட்டப்படியேதான் காரியம் நடந்திருக்கிறது.

"மதுவிலக்குச் செய்யவேண்டியது சரியே. ஆனுல் அதுநடக்குமா? ஜனங்கள் கள்ளத்தனமாகக் குடிக்கவும், கள்ளச் சரக்கு விற்பனேயும் அதிகரிக்கவுமாகிவிடுமே. குடிப்பவன் சமுதாயத்திலே குறையவேண்டுமாஞல் அறிவு பெருகவேண்டுமே. கள்ளுக்கடைகளே மூடிவிட்டால் போதுமா? கடையிலே விற்றகள், வீட்டுப் புறக்கடைகளிலே விற்கப்படும் நிலே ஏற்பட்டால் என்னசெய்வது?"

ஒரு காங்கிரஸ் M. L. A.

"அதைப்பற்றி நமக்கென்ன கவலே சார்? போலீசார் கவனித்துக்கொள்ளட்டும்."

ஆச்சாரியார்.

"மதுவிலக்குச் சட்டம் செய்தும்பயன் ஏற்படவில்லே. திருட்டுத்தனமாகக் குடிப்பதும், ரூடிவகைகளே விற்பதும் அதிகரிக்கிறது என்று புகார் கிளம்புமே"

காங்கிரஸ் M.L.A.

"பேஷாகக் கிளம்பட்டுமே! அது நம்மை என்னசெய்யும்?"

ஆச்சாரியார்.

"நாம்போட்ட சட்டம் பிரயோஜனமில்லே என்று ஏற்படாதோ?"

காங்கிரஸ் M.L.A.

"ஏற்படட்டுமே, அதனுல் குடிமுழுகிவிடுமா? மதுவிலக்குப்போன்றசட்டங்கள் பரிபூரண வெற்றிபெற வேண்டுமாஞல், காங்கிரஸ் கட்சிக்கு, மாகாண ஆட்சி கிடைத்ததுபோலவே, மத்திய சர்க்காரிலும் ஆட்சி கிடைக்கவேண்டும் என்று பிரசாரம் செய்யவும், அதிகாரத்தைக் கேடகவும், வெள்ளேக்காரரைக் கண்டிக்கவும், தங்கமான சந்தர்ப்பமல்லவா அது."

ஆச்சாரியார்.

"அப்படியா விஷயம்? சட்டம் ஒழுங்காக நடைபெறவில்லே என்று ஜனங்கள் சலித்துக்கொண்டால்?"

கா. M. L. A.

"ஜனங்களுக்குச் சலிப்பு எப்படி ஏற்படும்? நான் வருஷத்திற்கு இரண்டு ஜில்லா மதுவிலக்கு, என்று சட்டம்பிறப்பித்தபடி இருப்பேன். அந்த வருஷம்பூராவும் அதைப்பற்றிப் புகழ்வார்கள். சலிப்பு வளர்வதற்குள், வேறு இரண்டு ஜில்லாவிலே மதுவிலக்கு ஏற்படுத்துவேன். உடனே அதைப்புகழ ஆரம்பிப்பார்கள். எப்படி ஜனங்கள் சலிக்கமுடியும்? நேரம் எது?"

ஆச்சாரியார்.

"ஓகோ! அதற்காகத்தான், ஒரே அடியாக, மாகாணம் பூராவும் மதுவிலக்கை ஏற்படுத்தாமல், கொஞ்சம்கொஞ்சமாகச் செய்கிறீர்களா?"

கா. M. L. A.

"உமக்குப்புரியாது அந்தத் திட்டத்தின் சூட்சமசக்தி. அந்தச் சட்டம் நாம் பதவியிலிருக்கும் வரையிலே நமக்குப் புகழைக்கொடுக்கும். அதுமட்டுமா? நாம் பதவியை இழந்துவிட்டோமாஞல், மறுபடியும் பதவிக்குவர வழிசெய்யும்"

ஆச்சாரியார்.

"அது எப்படி?"

கா. M. L. A.

"இதுதெரியவில்லேயா? நாம்பதவியை விட்டு வெளியேறியதும், நாங்கள் அரும்பாடுபட்டு நிறைவேற்றிய மதுவிலக்குச் சட்டத்தைக் கவனிக்கவில்லே இப்போதிருக்கும் சர்க்கார், ஆகவே குற்றம் அதிகரிக்கிறது. சர்க்காருக்கு இதிலே சிரத்தை இல்லே. ஆகவே நாங்கள் மறுபடியும் பதவிக்குச்சென்ருக வேண்டும். பதவிமீது ஆசையல்ல, மதுவிலக்குமீதுள்ள ஆசையிஞல் பதவி என்ற பாரத்தை சுமக்க முன்வருகிறோம் என்று பிரசாரம் செய்தால் பதவி நம் காலடியிலே வந்து விழாதோ?"

ஆச்சாரியார்.

"ஆஹா! ஆச்சாரியாரே! அபூர்வமான மூளே உம்முடையது."

கா. M. L. A.

"அதை நீர் எனக்குச் சொல்லவேண்டுமோ! கவர்னரே சொன்ஞர். அதுஇருக்கட்டும்? இந்தச்சட்டத்திலே உள்ள மற்றோர் ஜீவசக்தி என்ன தெரியுமோ? இது நடை முறைக்கு ஏற்றதல்ல. சட்டம் வெற்றிபெறுது."

ஆச்சாரியார்.

"சட்டம் வெற்றிபெறுது என்பது தாஞ அதன் ஜீவசக்தி! புளிப்பை இனிப்பு எனப்புகல்வதா?"

கா. M. L. A.

"பைத்யம் நீர், சட்டம் வெற்றிபெறக் கூடியதல்ல வாகையால், நாம் பதவியை விட்டுவிலகிவேறு எவரேனும் பதவிக்கு வந்தால், அவர்கள் இந்த உபயோகமற்ற சட்டத்தைக் கட்டிக்கொண்டு அழுவதைவிட, அதனே ரத்துசெய்துவிடுவோம் என்று எண்ணிச் சட்டத்தை ரத்துசெய்வர். உடனே நாம் கிளர்ச்சி செய்யலாம். கண்டிக்கவும், கூட்டங்கள் போடவும், அறிக்கைவிடவும் வசதிகிடைக்கும், நமக்கும், பதவிக்குத்திரும்பிவர வழிஏற்படும். புண்யவான்கள் கள்ளுக்கடைகளே ஒழித்தார்கள், பாவிகள்வந்து பழயபடி கடையைத்திறந்தார்கள் என்று ஜனங்கள் ஆத்திரத்தோடுகூறும் நிலேமையை உண்டாக்க, இந்தச் சட்டத்திலே வழி இருக்கிறது."

ஆச்சாரியார்.

"பேஷ்! பேஷ்!! ஆச்சாரியாரே,உமது திறமையே திறமை. அந்தக்காலத்துக் கௌடலியர் உம்மிடம் தோற்றுத்தான் போவார். நமக்குப்புகழும், நம் எதிர்க்கட்சிக்கு இகழ்ச்சியும் வாங்கித்தரவல்ல சட்டத்தைச்செய்த உமது திறமையை என்னென்பேன்!"

கா. M. L. A.

மதுவிலக்குச் சட்டத்தின் போது, நான்மேலே தீட்டியுள்ளபடி, அன்பர் ஆச்சாரியார், காங்கிரஸ் M. L. A. யுடன் பேசிஞரோ இல்லேயோ, அவர் மனதிற்குள்ளாகவே இதுபோன்ற கேள்வியும் பதிலும் கிளம்பிக் கிளம்பிவேலே செய்திருக்கும் என்று நினேக்கிறேன். மதுவிலக்குச்சட்டம், தன்கட்சிக்கு மதிப்புத்தருவதோடு எதிர்க்கட்சிக்கு இடிவாங்கித்தரக்கூடியதாக இருக்கும் விதமாகவே ஆச்சாரியார் அமைத்தார். மதுவிலக்கு உண்மையிலேயே வெற்றிபெற வேண்டுமென்ற எண்ணம் ஆச்சாரியாருக்கு இருந்திருப்பின், ஏக காலத்திலே மாகாணம் பூராவிலும் மதுவிலக்குச்சட்டத்தை இயற்றி, அதஞல் விளேயக்கூடிய நஷ்டத்தை ஈடுகட்ட, வழிவகை செய்துகொண்டு இருக்கலாம். சர்வகட்சிகளேயும் முன் கூட்டியே கலந்து ஆலோசித்து, எந்தவிதமாகச் சட்டத்தைஅமைத்தால், வெற்றிபெறும் என்பதுபற்றி முடிவு செய்திருக்கலாம். மதுவிலக்குக்கேற்ற மனப்பான்மையை நாட்டிலே உண்டாக்கியிருக்கலாம். அவை ஏதும் செய்யாது மந்திரவாதி,கோலேக்கொண்டு சுழற்றி, கோவெனக்கூவி, விபூதியைத் தூவி, பாவிபரப்பா இங்குஇல்லே,ஆகவே மந்திரம் பலிக்கும் என்று ஆவிஎழச் சொல்லித், தோலேப்பாம்பாக்கிக், கொட்டையைச் செடியாக்கிக்காட்டி, வித்தை அத்தனேயும் ஒருவேளே சோற்றுக்குத்தான் என்றுகூறிக் காசுகேட்கும் விதமாகவே ஆச்சாரியார், அதிகாரம் என்ற மந்திரக்கோலால், அபூர்வமான சட்டத்தை அரைவிநாடியிலேசிருஷ்டித்தார். பாம்பு பழயபடி பெட்டிக்கும், தோல் வழக்கப்படி ஜோல்ஞைக்கும் போய்ச் சேருவதுபோல, ஆச்சாரியாரின் சட்டமும்,மட்டந்தட்டப்பட்டுக்கெட்டுப்போய் விட்டது. மந்திரவாதியின் நிலேபோலவே ஆச்சாரியாருக்கு இன்று ஏற்பட்டுவிட்டது. மந்திரவாதிக்கும்ஆச்சாரியாருக்கும் மட்டுமல்ல, மகேஸ்வரன் சிவபிராஞுக்கே அதேநிலேதான் ஏற்பட்டது. மாணிக்கவாசகரின் பாசுரத்தைப் பரிசாகப்

(5 பக்கம் பார்க்க)

27–11–43-ல் காஞ்சிவரத்தில் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட ஆசிரியர்கள் மாநாட்டு நிகழ்ச்சிகள் அடுத்த இதழில் வெளிவரும்.


# திராவிட நாடு

காஞ்சி 5—12—43 ஞாயிறு


## திராவிடர் கழகம்!

"சூழும் தென்கடல் ஆடுந்குமரி
தொடரும் வடபால்
அடல்சேர் வங்கம்
ஆழங்கடல்கள் கிழக்குமேற்காம்
அறிவுந்திறனும் செறிந்தநாடு"

இது எனது நாடு, பொன்நாடு. நான் பிறந்தநாடு, நானிலத்திலே இதற்கில்லை ஈடு, என்று உள்ளத்திலே உவகையும் எழுச்சியும் பொங்கிடச் செய்யும் விதத்திலே, எல்லைக்கோடும் எழிலும் விளக்கி, இயல்பும் வளமும் இயம்பி, கவி கனக சுப்புரத்தினம் (பாரதிதாசன்) திராவிட நாட்டுப்பண் அமைத்தார். திராவிடநாடு திராவிடருக்கே, என்ற பேரிகையைப் பெரியார் கொட்டினார், அந்த முழக்கம் வீரர்களின் கண்களிலேஒளியையும், எதிரிகளின் நெஞ்சிலேசளியையும், கவிகளின் உள்ளத்திலே உணர்ச்சியையும்ஊட்டிற்று. பற்று எனும் பூந்தோட்டத்திலே மலர்ந்தது, புரட்சிப்பண்! அதன்மணம் எங்கும் பரவி, எவருக்கும் மகிழ்வூட்டிவருகிறது.

திராவிடத் திருநாட்டினிலே ஆரிய அரசா? அதற்குப் பார்ப்பனமுரசா? என்ற கேள்வி பிறந்துவிட்டது. ஆங்கிலரைமிரட்டி, அரச உரிமைபெற்று அதை அக்கிரகாரத்துக்குத் தானம்தந்துவிடுவதா? அழகாகுமா? ஆண்மையாமோ? என்ற தன்மானமொழிகேட்கிறது. திராவிடஅரசுரிமையைப்பெற, ஊனுடல் கேட்பினும் தரத்தயங்கேன் என்ற வீரஉரை எழும்பிவிட்டது. எங்கும் இந்த எழுச்சி! மங்கும் உணர்ச்சி, மீண்டும் பொங்கிடக் காண்கிறோம். இழந்த நாட்டை மீண்டும் பெற்றேதீருவோம் என்ற சூளுரை கேட்டுப் பூரிக்கிறோம்.

நாமிருக்கும்நாடு நமதென்பதறிந்தோம், இது நமக்கே உரிமையாம் என்பதும் தெரிந்தோம். இதனை, இந்தியா வெனும் உபகண்டத்திலே பிணைத்திடும் சூதினை வெறுத்தோம். இனி, இந்த அணைப்புக் கூடாது, தனிஅரசு நாட்டுவோம், தனிப் புகழை ஈட்டுவோம், என்று ஆணைகூறிடும் வீரர்களை அணிவகுப்புகளிலே கண்டோம், அக மகிழ்வு கொண்டோம்.

சொந்த நாட்டிலேயே அடிமைகளாகிச், சோற்றுத்துருத்திகளுக்குப் பாதந்தாங்கி வீரமிழந்து விவேகமிழந்து வதையும் திராவிட இனம், இன்று தன்னை அறிந்து எழுச்சிபெறவும், தனது நாட்டை மீட்டிடவும் துணிந்தது. இது, உலகிலேநடைபெற்ற விடுதலைப்போர் வரலாறுகளிலே, இடம் பெறுந்தன்மையது. மௌனத்தால் இதனை மறைப்பதாக மனப்பால் குடிக்கும் மௌடிகர்களும், மிரட்டி அடக்கப்படும் குருடர்களும், காலமெனும் குருவிடம் பாடங்கேட்பர், அவர்பற்றி நமக்குக்கவலையில்லை. திராவிடநாட்டுப் பிரிவினையை, நீதிக்கட்சி, திருவாரூர் (மாகாண) மாநாட்டிலே, ஏற்றுக்கொண்டது. பெரியாரின் பெரு முழக்கம், இந்தியாவின் பல்வேறு நகரங்களிலே, பரவிற்று. அசாமிலுள்ள கௌஹத்தியிலிருந்து அம்பா சமுத்திரம் வரையிலே, பாஞ்சாலநாட்டுலாகூரிலே, வங்கநாட்டுக் கல்கத்தாவிலே, ஐக்ய மாகாணக் காசியிலே, ஆந்திரத்திலே, மராட்டிய நாட்டிலே, பல்வேறு நகர்களிலே, பெரியார், திராவிடநாட்டுப் பிரிவினைபற்றிச்சொற்பொழிவாற்றினார். பிரிவினைத் திட்டத்தை வலியுறுத்திக் காஞ்சியிலே தனி மாநாடு நடைபெற்றது. நீதிக்கட்சியினர், திராவிடநாட்டுப்பிரிவினை கோருகின்றனர் என்பதுமட்டுமல்ல, அதைத்தவிரப் பிறிதொன்றையும், நாட்டுநலிபோக்கும் மருந்தென்று கொள்ளார் என்ற நிலையும் உண்டாகிவிட்டது. திராவிடநாட்டுப்பிரிவினைக் கிளர்ச்சியின் எதிரொலியெனக் கிளம்பிய பாகிஸ்தான் திட்டம், இன்று முஸ்லீம் லீகின் ஜீவாதாரக்கொள்கையாக்கப்பட்டுவிட்டது. பாகிஸ்தானை ஒப்புக்கொள்ளாதவர்கள், லீகிலே இருக்க முடியாது. லீகின் உறுதியும்உத்வேகமும் இதன்பயனாகப் பன்மடங்கு அதிகரித்துவிட்டது. இதுபோன்றே, நீதிக்கட்சியிலும், திராவிடநாட்டுப் பிரிவினையே உயிர்நாடியாக்கப்பட வேண்டும், என்றுநாம் பன்முறைகூறியதுண்டு. சென்ற கிழமை சேலத்திலே, நமது ஆவல்பூர்த்தியானது பற்றிப் பெருமகிழ்வு கொள்கிறோம். திராவிடநாட்டுப்பிரிவினைக்குப் பாடுபடுவேன் என்ற ஆணையை மேற்கொள்பவரே இனி நீதிக்கட்சி அங்கத்தினராக இருத்தல் வேண்டும் என்ற தீர்மானம், நீதிக்கட்சி நிர்வாகக்கமிட்டிக் கூட்டத்திலே ஏகமனதாக நிறைவேறி இருக்கிறது. அம்மாடி! கூடினார்களா? என்றுரைத்த அன்பர்கள், இனி அதுசரி! சரியானவேலை நடந்திருக்கிறது, என்றுகூறாவிடினும், மனதிலே எண்ணுவர் என்று நம்புகிறோம். "ஐயோடா" என்ற அச்சக்கூச்சலிட மாட்டார்கள் நமது எதிர்க்கட்சியினர். ஆனால், இந்த ஆணை நிபந்தனை அவர்களை குலுக்கிவிடும் என்பது திண்ணம், சர்க்காருக்கும், நீதிக்கட்சியின்நினைப்புஎன்ன, நிலைமை என்ன, திட்டம் என்ன, என்பது விளங்கிவிடும்! இவற்றை எல்லாம் விடப், புதிய உலக அமைப்பிலே, கவனிக்கப்படவேண்டிய ஒரு முக்கிய பிரச்னை இது வென்பதை, அறிவுள்ள அரசியற்றலைவர்கள் தெரிந்துகொள்ள, இத்தீர்மானம் அடிகோலுவதாகும். திராவிடநாட்டுப்பிரிவினை ஆணைத் தீர்மானத்தைத் தக்க சமயத்திலே நிறைவேற்றிய நிர்வாகக் கமிட்டியை நாம் மனமாரப்பாராட்டுகிறோம்.

மற்றோர் மகிழ்ச்சிகரமான செய்தி. இனமறியாது இடர்ப்படும் இழிகுலமக்களல்ல நாம்! பண்டைப் பெருமையும் பண்பும் செறிந்த மக்கள், வளமும் வசீகரமும் மிளிரும் நாட்டுக்குடையோர், ஆனால் நம்மை நாம் மறந்தோம், நாட்டை இழந்தோம், நலிந்தோம். நாம் யார், என்பதை நவிலவும் கூசிப், பார்ப்பனர் அல்லாதார் என்று, தனிப்பெயர் இல்லாதார்போலத் தடுமாறிவந்தோம். இந்நிலையைப் பெரியார் தீரமாகமாற்றித் திருவாரூரிலே, **நாம்திராவிடர்கள்** என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார். ஆனால் நமது கட்சிக்கோ இன்னமும் தென்னிந்திய **நலஉரிமைச்சங்கம்** என்று பெயருளது. இனத்தின் மீது நமது இலட்சியம் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்தப் பெயர் எடுத்துக்காட்டவில்லை. எனவே சேலத்தில்கூடிய நிர்வாகக் கமிட்டி, இனி, நமது கட்சியைத் தென்னிந்திய திராவிடர் கழகம்என அழைக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது. இது நமது எதிர்காலவேலைத் திட்டத்திற்கு மிக்கஊக்கமும் ஆக்கமும், எழுச்சியும் கவர்ச்சியும் தரக்கூடியது என்பது நமது கருத்து. இன்னமும் தெளிவாக்கத், தென்னிந்திய என்ற தொடரையும் நீக்கிவிட்டுத், **திராவிடர்கழகம்** [Dravidian League]என்ற பெயரை ஏற்று, நமது கட்சி, திராவிட நாட்டுப் பிரிவினையை மூலாதார வேலைத்திட்டமாகக் கொள்ள வேண்டுமென்பது நமது நோக்கம். நாம் திராவிடர், நமதுநாடு திராவிட நாடு, நமது நோக்கம் திராவிட நாட்டைத் திராவிடருக்காக்குவது. நாங்கள் பார்ப்பனர் அல்லாதார் என்று கூறிக்கொள்வதும், எங்கள் நாடு இந்தியாவிலே ஒரு பாகம் என்று பேசுவதும், எங்கள் நோக்கம், பார்ப்பனரல்லாதாருக்கு நீதி கேட்பது என்றுரைப்பதும்; ஏன்? நமக்கென்ன, தனிப்பெயர் இல்லையா, தனி இடம் இல்லையா, அதைக்கூறவும் கேட்கவும், வெட்கமா! நீக்ரோ தன்னை நீக்ரோவென்று கூறிக்கொள்வதைப் பெருமையாகக் கருதுகிறான்! எஸ்கிமோவும் அப்படியே! நாடேஇல்லாத யூதனுக்கும், இனப்பெயர் என்றால் ஓர் எழுச்சி! காடன்றி நாடுஏதும் சொந்தமின்றி, கால்நடையாக இங்குவந்து திராவிடரின் காலடியிற்கிடந்து இன்று தங்கள் காலடியிலே திராவிடரைக் கிடத்திக்கொண்டு, பூதேவர்களாய், புண்யசீலர்களாய், போகபுருஷர்களாய், ஆண்டவனின் அர்ச்சகர்களாய், வாழும் இனம், தன்னை ஆரிய இனம், என்று கூறிப்பூரிக்கிறது. முடி

யுடை வேந்தரையும் படையுடை மாந்தரையும், வளமிகு தரணியையும் பெற்று வாழ்ந்தநாம், நம்மைத் திராவிடர் என்று கூறிக்கொள்ளக் கூசுவது, மடைமையன்றோ! திராவிடப் பெருங்குடி மக்களே! இரண்டு திங்களிலே, கூடுகிறது, சேலத்திலே நமது மாநாடு! பெருந்திரளாக வாருங்கள், பெருமிதத்தோடுகூறுங்கள், நாங்கள் திராவிடர் என்று. திராவிடருக்குத் திராவிட நாடு என்று முழக்கம் செய்யுங்கள்! அதைப்பெற்றே தீருவோம் என்ற சூள்கூறுங்கள்,

வளமார் எமது திராவிடநாடு
வாழ்க! வாழ்கவே!!

என்று வாழ்த்துங்கள், விடுதலைப் போர் வீரராகப் பதிவு செய்துகொள்ளுங்கள்! நாட்டை மீட்டிட வாரீர், நானிலமெங்குமே சுதந்தரநாதம் பெருகுது கேளீர், என்றுகூறித், திராவிடப் பெருங்குடி மக்களை அன்புடன் அழைக்கிறோம். வாழ்க திராவிடர்! திராவிடநாடு திராவிடருக்கே!!

---

## ஆள் தேவை.

(3-ம் பக்கத்தொடர்ச்சி.)

பெற்று, நரியைப் பரியாக்கினர். ஆனால் ஒரே இரவிலே, பரிமீண்டும் நரியாகிக், கனைத்துஊளையிடத் தொடங்கி, கெம்பீரமான நடைமாறிக் கோணற்கூத்து துவங்கி வெளியே ஓடுமுன்பு, அங்கு இருந்த குதிரைகளையும் கடித்துக் கொன்றுவிட்டதாகத்தான் கதை! சாதாரணகதையல்ல, கடவுட்கதை! மூடனிடம் பிச்சைக்குச் சென்றானும், பட்டைநாமத்தோடும், பளபளப்பான செம்போடும். அக்கம் பக்கத்திலே, கிடைத்த அரிசியும் கொஞ்சம் அதிலே இருந்ததாம். பட்டை நாமக்காரன் பிச்சைகேட்டது கண்ட மூடன், தடியனே! உனக்கு நாமமும் நாஅசைவும் தவிரவேறு யோக்யதை கிடையாதா? என்று கடிந்துரைத்து விட்டு, செம்மையும் தூக்கிக்கொண்டு போனானும். செம்புக்குச் செம்பும்போய், கோவிந்தா, செம்பிலிருந்த அரிசியும் போச்சே, கோவிந்தா! என்று கதறிக் கொண்டே சென்றானும், பட்டை நாமக்காரன். அதுபோல், பரிநாரியானதுடன், முன்புஇருந்த பரியும்போச்சேபரம சிவம்! என்றுஅன்றுஅழுதிருப்பார்கள். ஆச்சாரியாரின் சட்டமும், மந்திரவாதியின் தந்திரம்போல, மகேஸ்வரனின் ஜாலவித்தை போல, பூத்து உதிர்ந்துவிட்டது, முளைத்துக் கருகிவிட்டது.

மதுவிலக்குச் சட்டம் நிறைவேற்றப் பட்டபோதே, நமது தலைவர்கள், "ஐயா, ஆச்சாரியாரே! இந்தச் சட்டம் நிலைக்காது, உமது நினைப்பு நடக்காது, உண்மையிலே மதுவிலக்கு ஏற்படும் விதமாகச் சட்டம் அமையவில்லை" என்று கூறினர். ஆச்சாரியார் கேலிசெய்தார். ஆனால், பிற்கால நடவடிக்கைகள், நமது தலைவர்களின் சொல்லை நிரூபித்துக் காட்டிற்று. கள்ளச் சாராயக்கடைகள் காடு மேடுகளிலும், சத்திரம் சாவடிகளிலும் உண்டாகிவிட்டன. கடைக்குப்போய்க் கள்தேடுவதற்குப் பதிலாகக், குடி, குடிகாரனைத் தேடிக்கொண்டு வீடுவரத் தொடங்கிற்று. ஆயிரத்திலொருவர், அகப்பட்டவர், என்ற முறையிலே, சிலர் சிக்கிக் கொண்டனர், சிக்காத பேர்வழிகள் சிரித்தனர். இந்த நிலையிலே சட்டம் செல்லாக்காசாகி விடவே, இப்போது சர்க்கார், சட்டம் அமுலில் இருக்கவேண்டியதில்லை என்று உத்தரவு பிறப்பித்துவிட்டனர். இது, ஆச்சாரியாரின் திட்டப்படி நிறைவேறியதேயாகும்! அவர் எண்ணத்தின்படியே, இன்று, சர்க்காரைக் கண்டிக்கவும், காங்கிரஸ் கட்சிக்குப் பலம் தேடவும், இதுஓர் சிலாக்கியமான சந்தர்ப்பமாகிவிட்டது. கடந்த பத்து நாட்களாக, ஆச்சாரியார் கம்பெனி, ஆரம்பமாகிவிட்டது.

மதுவிலக்குச் சட்டத்தை மகத்தான முகூர்த்தநாள் குறித்துத் துவக்கியது, அமெரிக்க சர்க்கார். மதுவிலக்குச் சட்டத்தை அமுல்நடத்தப், பிரத்யேக அதிகாரிகள் கிளம்பினர். பூனைக்கால் ஜான்சன் எனும் பிரசாரத்தலைவரின் படை ஒருபுறம், சர்க்கார் சிப்பந்திகள் ஓர் புறம், போலீஸ் மற்றோர்புறம், அந்தச்சட்டத்துக்கு அரணாக அமைந்தது. ஆனால் வரண்ட அமெரிக்காவிலே, வாய்க்கால்கள் தோன்றிவிட்டன, பூமிக்கடியே, புகைத்திரைக்குப் பின்னாலே, பூலோகரம்பைகளின் படுக்கைஅறையிலே, சீமான்களின் சிங்காரத் தோட்டங்களிலே, பல்வேறு இடங்களிலேமதுபானக் கள்ளக்கடைகள் தோன்றிவிட்டன, சட்டம் பயனற்றது கண்டஅமெரிக்க சர்க்கார், அதனைரத்து செய்துவிட்டனர். சட்டம் இயற்றியதும், சட்டத்தை ரத்துசெய்ததும் அமெரிக்க சர்க்காரே. எனவே, கண்டிக்கவோ கலகமூட்டவோ யாருக்கும் நினைப்பில்லை. இங்கோ, சட்டமியற்றியது ஆச்சாரியார். அதைரத்து செய்தது வெள்ளைக்கார சர்க்கார்., எனவே, கண்டிக்க இதனைப் பயன்படுத்திக்கொள்ள முடிகிறது. ஆச்சாரியார், அன்று நமது தலைவர்கள் கூறிய அறைவுரைகளைக் கேட்டாரில்லை. எங்கே, நமதுகட்சியினர் அதிகாரத்துக்கு வந்து விடுகின்றனரோ, என்று அஞ்சி, அஞ்சி வாழ்ந்தார். ஆண்டால் நாங்கள் ஆளுவோம், இல்லையானால் துப்பாக்கி முனையே ஆளும்என்று கூறினர். ஆங்கில ஆலோசகர் ஆட்சி ஏற்பட்டதும், ஆசி கூறினர், ஆதரித்தார். மற்றக் கட்சிகள் மூலாம் பூசப்பட்ட பித்தளை, மோசடி. ஆலோசகர் ஆட்சியோ, வெறும் பித்தளை. ஆகவே அதிலே மோசமில்லை என்று குட்டிக்கதை கூறினர். ஆலோசகர் ஆட்சி நீடித்தால் நல்லதே என்ற தொனியிலே பேசினர். இப்படிப்பட்டவர் இன்று, ஜஸ்டிஸ்கட்சி பதவிக்கு வந்திருந்தாலும் பாதகம் ஏற்பட்டிருக்காது! என்று ஆயாசத்தோடு கூறுகிறார். ஏதோ பாவம், கஷ்டகாலத்திலேனும் நீதிக்கட்சியின் நினைப்பு அவருக்கு வருகிறதே, என்ற ஆறுதல் எனக்கு.

சரி! மதுவிலக்குச்சட்ட ரத்துக்கும், ஆச்சாரியாரின் புதுக்கம்பெனிக்கும் என்ன தொடர்பு என்பீர்கள்? இப்போது, சர்க்காரின் தீர்மானத்தைமாற்ற, ஒருகிளர்ச்சி துவக்கப்போகிறாராம், ஆச்சாரியார்! பட்டாளத்திலே சேராதே! பணத்தைப் பாங்கியில் போடாதே! என்று கூவும் வீரர்களுக்கு மீண்டுமோர் சான்ஸ்! அது மட்டுமல்ல! "பட்டாலத்திலே சேர்ராதே! பனத்தைபங்கியில்போட்டாதே!" என்று [தமிழைக் கொலைசெய்து] சுவர்களிலே கரியினால்எழுதிவந்தார்களே, ஏகாதிபத்ய ஒழிப்பு வீரர்கள். அவர்களுக்கு மறுபடியும் அருமையான வேலைதருகிறார் ஆச்சாரியார். ஆளுக்கொரு கரித்துண்டு எடுத்துக்கொண்டு, மதுவிலக்குப் பிரதேசங்களுக்குச் சென்று, சுவர்களிலே, கீறல் போடவேண்டுமாம், கள்ளுக்கடை வேண்டாம், என்று!

இரவுவேளைகளிலே, இப்பக்கம் அப்பக்கம் பார்த்துக் கரித்துண்டினால் வெள்ளைச் சுவரினைப் பாழாக்கும் இந்தத் திட்டம், பலன் கொடுக்குமா? இதைக் கண்டா, சர்க்கார் தமதுமுடிவை மாற்றிக்கொள்வர், என்றுதான் நீங்கள் கேட்பீர்கள், நானும் கேட்பேன். ஆனால் ஆச்சாரியாரின் மூளைத்திறந்தான் அலாதியானதாயிற்றே! அடுத்த வருஷம் அவரே கூறுவார், இந்தத் திட்டம் பயனில்லை என்று. தாமதித்தவரும் அவருடைய தீட்சணியபுத்தி எனக்குத் தெரியும். எனவே, கரிபூசும் படைக்குக் கமாண்டராகும் ஆச்சாரியார், அடுத்தவருஷம் படையைக் கலைத்துவிடுவார். அதற்குள் ஆள் தேவை! அறிவை ஒதுக்கிவைத்துவிட்டு, அதிலே சேரயார் முன்வருவார்கள் என்று கேட்பீர்கள்? இந்தத் தரித்திரம்பிடித்த நாட்டிலே எதற்குத்தான் ஆள் கிடைக்கமாட்டார்கள்? மலம் எடுக்க ஆள்இருக்கும் நாடல்லவோ இது! இங்கு கரிக்கோடிடவா ஆள்கிடைக்காது!

பரிதாபம்! பாராளும் மன்றங்களையும் நிர்வாக சபைகளையும், கவர்னரின் கொலுமண்டபங்களையும் வைசிராயின் மாளிகைகளையும் வலம்வந்த ஆச்சாரியாருக்கு இன்று, இத்தகைய கலைக்குதவாத வேலைக்கு ஆள்தேடும் காலம் வந்ததே, என் செய்வது! யாருக்காவது பாடத்தெரிந்தால் [கொஞ்சம் உரத்த குரலிலேயே பாடக்கோருகிறேன், அவருக்கு ஒருகாது கேளாது] பாடுங்கள்,

மஞ்சள் கருப்பாச்சுதே
மருக்கொழுந்தும் வேம்பாச்சுதே!

என்ற இலாவணியை!!

## கைவல்யம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டுப் பல மாதிரியாக நாங்கள் இருந்தாலும்—நடந்தாலும் பிரம்ம அம்சமல்லவா? என்கிறகதாப் பிரசங்கமும்,பழைய ருசியும் அந்தக்கோட்டையில் வாழாது. ஏனெனில், அந்தக்கோட்டை அனைத்தும் பிராமணர்களின் புத்தியின் வன்மையால் கட்டப்பட்ட பொய்க்கோட்டைகள் என்பதனால் மட்டுமல்ல, பிராமணனுடைய ஆச்சார அனுஷ்டானங்கள், ஒழுக்க நியமங்கள், அவைகளைத்தவறாமல் நடத்தவேண்டிய சட்டதிட்டங்கள் ஆகிய இவைகளால் மனம் சுத்தமடைந்து, புத்தி விசாலப்பட்டுத், தன்னைச் சர்வத்திலிருந்தும் பிரிவாகக் கண்டு, உலகமும் தானும் ஒன்றெனக் கண்ட அறிவை அடைந்த பிராமணர்கள் பலர் இருந்தார்கள். அவர்களிடம் ஜனசமூகம் பக்தியும் மரியாதையும் வைத்தார்கள். அவர்கள் ஆச்சாரிகள் என்றும், சாஸ்திரிகள் என்றும் அழைக்கப்பட்டார்கள். அவர்களுக்குப்பின்வந்த சந்ததிகள் பிராமண ஒழுக்கத்தில் நிற்க முடியாமலும், பிராமணனுக்கு முதல் ஒழுக்கம், உலக ஒழுக்கங்களைவிட வேண்டியது; அதைவிட முடியாமலும்போய் விட்டது. அந்தக் காலத்தில் பிராமணர்கள்,மதுமாமிசம், யாகம்செய்து சாப்பிட்டார்கள். யாகம்செய்ய மந்திரம், புரோகிதன், ஆச்சாரி, பணம் முதலியனவேண்டும்; கஷ்டமும் அதிகம். இந்தக் காலத்தில், மதுமாமிசக் கடைகளும், ஓட்டலில் தனியிடமும், எங்குபார்த்தாலும் இருக்கின்றன. அப்துல்ரகிமான் ஹைகோர்ட் ஜட்சு, சென்னைக் காஸ்மாபாலிட்டன் கிளப் தலைவராக இருந்தகாலத்தில்,கிளப்பின் மேல்மாடியில் இந்தக் காலத்துச் சந்ததியார்களுக்கு மதுமாமிச ஓட்டல் வைத்தார்கள். அதனாலும், அக்கோட்டையில் பிராமணன் என்னும் நடிப்பும் ஆணவமும் வாழாது. உங்கள்கலையுணர்ச்சியும் வளர்ச்சியும், கறையிலாத தத்தக் காப்பித்தக்காப்பேச்சும்வாழாது. மற்றவை அடுத்த கடிதத்தில்.


இங்ஙனம்,

கைவல்யம்.

## தேநீர் விருந்து.

காஞ்சிவரம் நவம்பர் 30.

சென்னை, செங்கற்பட், வடாற்காடு, தென்னாற்காடு ஆகிய ஜில்லாக்களிலிருந்து காஞ்சிபுரம் வந்திருந்த யுத்தப் பிரசாரகர்கள் சுமார் 100-பேருக்கு 28—11—43-ல் தோழர் C. N. அண்ணாத்துரை, M. A; அவர்கள் தமது "திராவிடநாடு' பத்திரிகை நிலையத்தில் ஓர் தேநீர் விருந்தளித்து, அவர்கள் நமது நாட்டுக்காகச் செய்துவரும் தொண்டைப் பாராட்டினர்.



செங்கற்பட்டு மாவட்ட ஆட்சிமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் T. சண்முகம் அவர்களைப் பாராட்டிக் காஞ்சித் திராவிடநடிகர் கழகத்தார் 26-9-43ல் ஓர் தேநீர் விருந்தளித்தபோது எடுத்தபடம். படத்தில் நடிகர்கழகத்தலைவர் T. சண்முகம் அவர்களும், நடிகர்களும் இருக்கின்றனர்.

## நீதிக்கட்சி நிர்வாகக்கூட்டம்.

சேலம். நவம்பர் 27.

26—11—43-ல் சேலம் தேவாங்க பாடசாலையில் நீதிக்கட்சியின் நிர்வாகக் கூட்டம், தலைவர் பெரியார் E. V. இராமசாமி அவர்கள் தலைமையில் கூடிப்பின் கண்ட தீர்மானங்களை நிறைவேற்றிற்று. கூட்டத்திற்குப் பல ஜில்லாக்களிலிருந்தும் நிர்வாக உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

தீர்மானங்கள்:—

1. தென்னிந்திய நலஉரிமைச் சங்கம் (S. I. L. F.) என்பதை மாற்றித் **தென் இந்திய திராவிடர் கழகம்** (S. I. D. F.) என்று அழைக்கப்படவேண்டுமெனத் தலைவர் கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

2. திராவிட நாட்டுப் பிரிவினையை ஒப்புக்கொள்ளாதவர்கள் தென் இந்திய திராவிடர் கழகத்தில் உறுப்பினராக இருக்கமுடியாதென்று கொண்டுவரப்பட்ட தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

3. ஓட்டங்களில் காட்டப்படும் பார்ப்பனர்-அல்லாதார் என்ற பேதம் ஒழிக்கப்படவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்வதென்றும், அதற்கான கிளர்ச்சியைக் செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இன்னும் பல முக்கியமான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. தென் இந்திய திராவிடர் கழகத்தின் மாகாண மாநாட்டை ஜனவரி மாதத்தில் சேலத்தில் நடத்துவதென்ற முடிவுடன் நிர்வாகக் கூட்டம் இனிது முடிந்தது.

அன்று மாலை விக்டோரியா மார்க்கட் மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் சேலம் முனிசிபல் சேர்மன் தோழர் இரத்தினசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பெரியார் அவர்களும் தோழர்கள் C. G. நெட்டோ, M. A; B. L; C. N. அண்ணாத்துரை, M. A; Dr: A. கிருஷ்ணசாமி முதலியவர்கள் தற்கால அரசியல் நிலைமை, போர்முறை முதலான பொருள்கள் பற்றிச் சொற்பொழிவாற்றியதும் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது கலைந்தது.

## திராவிடர் கழகம்,

கோனுப்பட்டு.

திராவிடர் இன எழுச்சியை நோக்கமாகக்கொண்டு "திராவிடர் கழகம்" என்னும் பெயருடன் ஒரு கழகம் நூல் நிலையம், வாசகசாலை முதலியவற்றுடன் 31-10-43 மாலை 6மணிக்குப் பெரியார் தெருவில் தொடக்கப்பெற்றது. திரு. சுப. முருகப்பன் அவர்கள் தலைவராகவும், திரு. மு. விசுவநாதன் அவர்கள் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழியக்கப் பத்திரிகைகளும், பகுத்தறிவு முன்னேற்றத்திற்கான நூல்களும் வாங்கி மக்களிடையே பரப்புவதென முடிவுசெய்யப்பட்டது.

இராசிபுரம் "திராவிடநாடு" சந்தாதார்கள் தங்கள் பாக்கியை உடனுக்குடன் கொடுத்துவிடும்படி, கேட்டுக் கொள்ளுகிறேன்.

S. துரைசாமி ஏஜண்ட்

ஈரோட்டில்

# ★ சந்திரோதயம் ★

நன்கோடையும், வசூலும் ரூ, 5000.

பெரியார், அவர்கள் தலைமையில், ஈரோட்டில், 19—11—43 இரவு, சென்ட்ரல் தியேட்டரில், M. S. B. S. சபையினரின் ஜோடிப்புகளுடன், காஞ்சி திராவிட நடிகர் கழகத்தினர், "சந்திரோதயம்" நாடகத்தை விமரிசையாக நடத்தினர். ஜோலார்ப்பேட்டை, திருப்பத்தூர், சேலம், இராசிபுரம், நாமக்கல், கோபி, பவானி, திருப்பூர், கோவை, கரூர், திருச்சி, சிதம்பரம் ஆகிய பல்வேறு நகர்களிலிருந்தும், ஈரோடு பிரமுகர்களுமாகக் கொட்டகை நிரம்பியிருந்தனர். அதிகாலை 4-30 மணிவரை நாடகம் நடைபெற்றது. நாடக ஆரம்பத்தில், தோழர் T. P. S. பொன்னப்பா, பெரியார் அவர்கட்கு, காஞ்சித் திராவிட நடிகர் கழகத்தின் சார்பாக ஒரு வரவேற்பு இதழ் வாசித்தளித்தார். கோவை மாவட்டத்திராவிடர்கழகத்தின்சார்பாகப், பழய கோட்டைக்குமாரபட்டக்காரர் தோழர் N. அர்ஜுனன் அவர்கள், பெரியாருக்கு ஒரு வரவேற்புரை வாசித்தளித்தார். நாடக முடிவில், மேற்படி [illegible] சார்பில் கழகச்செயலாளர், பெத்தாம்பாளையம் P. பழனிச்சாமி அவர்கள், காஞ்சித் திராவிட நடிகர்கழகத்தாருக்கு ஒரு வரவேற்புரை வாசித்தளித்தார். நாடகத்தைப்பாராட்டிச் சேலம், கல்லூரித்தலைமைப் பேராசிரியர், தோழர் A. இராமசாமிக் கவுண்டர், முத்தமிழ்க்கலா வித்துவ ரத்ன தோழர் T. K. சண்முகம் ஆகியோர் பேசினர். பெரியார், முடிவுரையில், திராவிடநடிகர் கழகத்தாரைப் பாராட்டிப் பேசியதுடன், மேற்படி கழகத்தையும், திராவிட நாடு பத்திரிகையையும்ஆதரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு; "திராவிட நாடு" பத்திரிகைக்குக் கோவைத்தலைவர்கள் அளித்த நன்கொடையும், நாடக வசூலும் சேர்ந்து 4000 ரூபாய் என்பதனைப் பலத்தகரகோஷத்திடையே கூறினர். ஏற்கனவே, கோவைத்தலைவர் (பெயர் வெளியிடக் கூடாதென்பது இவருடைய கடுமையான கட்டளை) ஒருவர் தந்த ஆயிரம் ரூபாய் நன்கொடையுடன், கோவை வட்டாரம் 5000 ரூபாய், உதவி இருக்கிறது. டிக்கட் வசூல் மட்டும், 1300 ரூபாய்க்கு நடந்தது. செலவு ஆயிரத்து இருநூறு ரூபாய்.

நாடகம், மிகஉற்சாகமாக நடைபெற்றது. பெரியார் ஈ. வெ. இராமசாமி, தோழர்கள் குமாரபட்டக்காரர் N. அர்ஜுனன், ஈ. வெ. கிருஷ்ணசாமி, கோவை மோட்டார் மன்னர் G. D. நாயுடு, பொள்ளாச்சிப்பிரமுகர் S. V. V. நாயுடு, J. S. கண்ணப்பர், கைவல்யம், சிவநேசர், கான்சாகிப் ஷேக்தாவுது, M. சிக்கய்யா, அண்ணாமலைப்பிள்ளை, சேலம்ஜெகதீசச்செட்டியார், இராஜாராமலிங்கம், சோமசுந்தரக் கவுண்டர், திருப்பூர்சுப்பையாச்செட்டியார், S.R. சுப்பிரமணியம், புண்யகோடி முதலியார், சிதம்பரம் துரைராஜ், சீரங்கம் பரமசிவம், துரைசாமி, குடந்தை K. K. நீலமேகம், V. சின்னத்தம்பி, கோவிந்தசாமி, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, T. K. சங்கரன், T. K. சண்முகம், T. K. பகவதி, சிவதானு, நாராயணபிள்ளை, வீராசாமி, நாராயணசாமி, மற்றும் M. S. B. S. சபையினர் ஆகியோரும், மற்றும் பலரும் நாடகத்திற்கு வந்திருந்தனர். நடிகர் கழகத்தினருக்கும், M. S. B. S. சபையினர்; சென்ட்ரல் தியேட்டர் உரிமையாளர், நன்கொடையாளர் ஆகியோருக்கும், தோழர் P. சண்முக வேலாயுதம் அவர்கள் நன்றி கூறினர்.

நாடக முயற்சியைத்துவக்கி; வசூல் [illegible] படச் செய்து, திராவிட நாடு பத்திரிகைக்கு நன்கொடை திரட்டி, ஆர்வத்துடனும் அன்புடனும் உதவி செய்த பழய கோட்டைக் குமாரபட்டக்காரர் தோழர் N. அர்ஜுனன் அவர்களின் ஆதரவே, "சந்திரோதய" வெற்றிக்கு முதற்காரணம். நமது நன்றியறிதலை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். அவருடைய தொண்டு இனித் தமிழகத்துக்குக் கிடைக்கும் என்பதையும், கோவை மாவட்டத் திராவிடர் கழகத் தலைவராக அவர் இருக்க இசைந்தது, கோவை மாவட்டத் திராவிட வாலிபர்களுக்கு ஒரு வாய்ப்பு என்பதையும் மகிழ்ச்சியுடன் கூறுகிறோம். பணஉதவியும் வசூல் உதவியுமட்டுமின்றி, அவர், திராவிட நடிகர் கழகத்தாருடன் சகோதரர் போலப்பழகி, அன்புகாட்டி ஆதரவளித்ததைக் கழகத்தார் மனமாரப் பாராட்டுகின்றனர். தோழர் அர்ஜுனன் அவர்கள், நமக்குக் கிடைத்த அரிய திருகருவூலம், ஆம்! ஆனால் அக்கருவூலத்தைக் கண்டெடுத்து நம்மிடைகளிப்புறச் செய்த பெருமை, பெத்தாம்பாளையம் தோழர் P. பழனிச்சாமி அவர்களைச் சார்ந்ததாகும். கோவை மாவட்டத் திராவிட முன்னணிப்படைக்குத் தலைமை தாங்கும் ஆற்றல் பெற்றவர், தோழர் பழனிச்சாமி அவர்கள். பண்டைத்திராவிட வீரரை நினைவூட்டும் உருவம், கள்ளங்கபட மற்றமனம், தாய்மாற்றுவதிலே திறம், வெண்கல ஓசையுள்ள சிரிப்பு, கொச்சைத்தமிழிலே இனிமையான பேச்சு, தமிழரின் எதிரிகளிடம் கடுங்கோபம், பெரியாரிடம் பெருமதிப்புக் கொண்ட பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள், இந்நாடக வெற்றிக்கு மற்றோர் முக்கியபுருஷர். ஈரோடு தோழர் பி. சண்முக வேலாயுதம், தமிழகத்துக்குப் புதிதல்ல! பெரியாரின் பெருந்தொண்டர், பேச்சும் செயலும் ஒருங்கே பெற்றவர், ஆச்சிவிலாச வாசி, தமிழரின் விசுவாசி, அடக்கமும் ஆற்றலும் அமைந்த வீரர்: இவர் "சந்திரோதயம்" ஒளியுடன் விளங்க, முகிலைக்கிழித் தெறிந்தவர், [illegible]யுமா, நடக்குமா, என்ற சந்தேகம், [illegible]ாக நடக்காவிட்டால் என்ன செய்வது என்ற சஞ்சலம், யார் உதவி செய்வார்கள் என்றசோகம், எனும் இன்னோரன்ன பிறமுகில் தப்பிக்கொண்டபோது, [illegible]ாமுயற்சி எனும் வேல்கொண்டு முகிலைத்தாக்கிச் சிதைத்துச் சந்திரோதயம் ஒளிவிடச்செய்த நண்பர். அங்கும் இங்கும், எங்கும் ஆடியும் ஓடியும் [illegible]யும் குறைகளைந்தும், தோழர் [illegible] வேலாயுதம் பணிபுரிந்தார். இவ்வீரருக்கும் எனது நன்றி—என் சார்பிலே கழகத்தின் சார்பிலே—ஏன், தமிழகத்தின் சார்பிலே யுந்தான்! தோழர் சண்முக வேலாயுதம் அவர்களுடன் [illegible] யாற்றிய எனது நண்பர்கள் [illegible] கெம்பய்யா, மாணிக்கவாசகம், நல்லசாமி, ரசாக், முத்து, மாரிமுத்து, பழனி [illegible]சாமி, [illegible], மற்றும்பல தோழர்கட்கு என் வணக்கம். பெரியாரின் சகோதரியார் குமாரர், தோழர் S. R. சந்தானம், எனக்குத்தம்பி முறை, காரியமாற்றும் திறமைக் குறைவிலேயோ, அண்ணன்! சந்திரோதயமோ, அதைமாற்றிவிட்டது. தோழர் சந்தானம், நாடக வெற்றிக்காக அரும்பாடு பட்டார். அவருக்கு என்நன்றியறிதலைக் கூறுவதைவிட, "தம்பி! பொதுப்பணியிலே ஈடுபடு, குடும்பப்புகழைக் காப்பாற்று" என்றசொல் மொழி கூறலே முறை.

முத்தமிழ்த்திறம்பெற்றுத், தமிழரின் கலைச்செல்வராக விளங்கும் [illegible]கள், T. K. சகோதரர்களின், [illegible] ஆதரவும், ஒத்துழைப்பும் எத்தகையது என்பதை அளவிட முடியாது. நாடகம் நடத்தத்தான் வேண்டும் என்று என்னை ஊக்குவித்து, இழுத்துவந்து மன்றமேறச் செய்து, சீன்கள், உடைகள் தந்து, மேடையின்கீழ் நின்று மேற்பார்வை செய்து, நாடகத்தை வெற்றிபெறச் செய்தனர், அத்தோழர்கள். அவர்களின் அன்பான ஒத்துழைப்பு இல்லையேல், சந்திரோதயம், சூரியோதயத்துக்கும் முடிந்திராது. தேய்பிறைபோய், வளர்பிறை கண்டேன், அவர்களின் பூரண உதவியால். அவர்களின் விடுதியிலே விருந்துண்டதால் போலும், திராவிட நடிகர் கழகத்தார் யாவருமே, மிகச்சிறந்த நடிப்புத்திறமை பெற்றனர், ஈரோட்டில். [illegible] நடிகர் தோழர் சிவதானு, [illegible] செல்வர்கள் நாராயணபிள்ளை, நாராயண

8-ம் பக்கம் பார்க்க.

## சந்திரோதயம்.

7-ம் பக்கத்தொடர்ச்சி.

சாமி, வீராச்சாமி, வெங்கடாசலம், இராஜேந்திரன், வாதன், ஜெயராமன், பத்மநாபபிள்ளை, ஆறுமுகம், பலவேசம், துரைராஜ் முதலிய தோழர்கள், [பெயரை விட்டனமே யன்றி நன்றியறிதலையல்ல]பலரும், திராவிட நடிகர் கழகத்தாருக்குப் பேருதவிபுரிந்தனர். சீன் அமைப்புக்கும், வேடஅமைப்புக்கும், அலங்கார விளக்குகள் அமைப்புக்கும், உதவிய தோழர்கட்கு எமது வணக்கம். நாடகத்தின் வெற்றிக்கு உறு துணையாயிருந்து, கேட்போரின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டனர் எமது பின்னணி இசையினர், ஆர்மோனியம் சண்முகானந்தாவும், தபேலா, ஆபிலாவும். மற்றும் எம்முடன் ஒத்துழைத்த எல்லாத்தோழர்கட்கும் எமது வணக்கம் உரித்தாகுக.

நாடக சமயத்திலே, திராவிட நாடு பத்திரிகைக்கு, ஆயிரம் ரூபாய் நன்கொடை யளித்த நமது கெழுதகை நண்பர், திருப்பூர் L. R. G. நாயுடு அவர்களுக்கு, எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். விலையுயர்ந்த உடைகள் பல, அவர், திராவிட நடிகர் கழகத்தாருக்குப் பரிசளித்தார். கழகம் அவருக்கு நன்றியறிதலைத் தெரிவிக்கிறது.

இவ்வளவு பெரிய முயற்சிக்கு ஆதரவு தந்து, வழிகோலி, உடல் நலமின்மையையும் பொருட்படுத்தாது, இரவு முழுதும் கண்விழித்திருந்து, எனது முயற்சியையும் கழகத்தின் முயற்சியையும் ஊக்குவித்த பெரியார் அவர்கட்கு நன்றி கூறுகிறேன். வணக்கம்.

அண்ணாத்துரை

## "சந்திரோதய" நாடகத்தின்போது, "திராவிட நாடு" பத்திரிகைக்கு, நன்கொடை வசூல் விபரம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| கோவை அன்பர் | 1000 | 0 |
| தோழர் திருப்பூர் L. R. G. நாயுடு அவர்கள் | 1000 | 0 |
| ,, புழயகோட்டை இளைய குமாரபட்டக்காரர் N. அர்ஜுனன் அவர்கள் | 200 | 0 |
| ,, ஈரோடு பெரியார் E. V. இராமசாமி | 150 | 0 |
| ,, கோவை S. V. V. நாயுடு அவர்கள் | 100 | 0 |
| ,, ,, பீமைய செட்டி | 100 | 0 |
| ,, பெத்தாம்பாளையம் P. பழனிச்சாமி | 100 | 0 |
| ,, திருப்பூர் S. R. சுப்பிரமணியம் | 100 | 0 |
| ,, ,, சேர்மன் K. N. பழனிச்சாமி | 100 | 0 |
| ,, கோவை R. V. லக்ஷ்மைய நாயுடு | 51 | 0 |
| ,, ஈரோடு E. M. அண்ணாமலை | 51 | 0 |
| ,, கோவை A. கிருஷ்ணசாமி செட்டியார் | 50 | 0 |
| ,, ,, Sir R. K. ஷண்முகம் | 50 | 0 |
| ,, ஈரோடு M. G. அங்கப்ப செட்டியார் | 50 | 0 |
| ,, திருப்பூர் K. C. பழனிச்சாமி | 50 | 0 |
| ,, பெரிய அக்ராரம் E. K. M. அப்துல் கனி சாஹிப் | 35 | 0 |
| ,, கோவை திவான்பஹதூர் C. S. இரத்தின சபாபதி முதலியார் | 25 | 0 |
| தோழர் ஈரோடு கான்சாஹிப் K. A. ஷேக்தாவுத் சாஹிப் M. L. A. | 25 | 0 |
| ,, ஊத்துக்குழி ஜமீன்தார் அவர்கள் | 25 | 0 |
| ,, ஈரோடு M. சிக்கைய நாயக்கர் | 25 | 0 |
| ,, ,, T. அண்ணாமலைக் கவுண்டர் | 25 | 0 |
| ,, பெரியஅக்ரகாரம் கான்சாஹிப் E.K. ஹாஜி முகமதுமீரா சாஹிப் & சன்ஸ் | 25 | 0 |
| ,, ,, E. K. அஹமது பாஷா சாஹிப் | 25 | 0 |
| " ஈரோடு S. K. ஷேக் தாவுத்சாஹிப் &Co. | 25 | 0 |
| ,, ,, S.K M. முகமது ஹபீப் | 25 | 0 |
| ,, ,, S. இராமசாமி நாயக்கர் | 20 | 0 |
| ,, ,, சண்முகம் ரைஸ் மில் | 20 | 0 |
| ,, ,, திராவிடர் கழகம் | 21 | 0 |
| ,, ,, S. K. S. காதர் சாஹிப் | 10 | 0 |
| ,, ,, சேர்மன் R. K. வெங்கிடசாமி நாயக்கர் | 10 | 0 |
| ,, பெரியஅக்ரகாரம் M. S. A. முகமதுபீ ஹபீபுல்லா | 10 | 0 |
| " ,, K. S. அப்துல் சமது | 10 | 0 |
| ,, வாங்கல் செல்வர் வளர்ச்சிச் சங்கம் | 5 | 0 |
| தோழர் வண்டிப்பெரியூர் அப்துல்கரீம் | 2 | 0 |
| நாடகத்தின்போது திருப்பூர் S. சுப்பையச் செட்டியார் அவர்கள் | 100 | 0 |
| ஈரோடு பெரியார் ஈ. வெ. இராமசாமி வசூல் தொகையை 4000 ஆக்க | 34 | 8 |
| ஆக மொத்தம்... | 3654 | 8 |
| கொட்டகையில் டிக்கெட் வசூல் மொத்தம்... | 1345 | 8 |
| நாடகச்செலவு (பிரயாணம், பக்கமேளம், விளம்பரம், வரி முதலியன) மொத்தம்... | 1215 | 0 |
| பாக்கி ரூபா... | 130 | 8 |

## ஜனாப் S. முகம்மது இப்ராகீம்.

பெரியகாஞ்சீவரம் பிரபலகயிலி வியாபாரம் மவுலானா கம்பெனியின் மானேஜிங் டாரைக்டர் ஜனாப் S. முகம்மது இப்ராகீம் அவர்கள், இரண்டாவது முறையாகத் "திராவிடநாடு" பத்திரிகைக்கு ரூபா 25. நன்கொடை அளித்தார்கள். இப்ராகீம் அவர்கள் பொதுக் காரியங்களில் தாராளமனதுடன் ஈடுபட்டுப் பொருள் உதவிசெய்பவர். அவர் இப்போது சொந்த ஊருக்குப்போகிறார். அவரது பொதுநல நோக்குப் பெரிதும் பாராட்டுதற்குரியது.

## இறுதிச் சடங்கு.

"சிதம்பரம் வட்டம் வடதலை ரகுராம் தோழர். செல்லப்பெருமாள் படையாச்சி மனைவி தோழியர் இரத்தினம்பாள் அவர்கள் இறந்தமை குறித்து இறப்புநாள் சடங்கு பார்ப்பனீயம் ஒழிந்த முறையில் புவனகிரி தோழர். சிங்காரவேலு அடிகள் சுமார் 1-30 நேர அளவு தக்க ஆதாரங்களோடு சொற்பொழிவாற்றி புரோகிதப் புரட்டு ஒழியவேண்டியதைப்பற்றி விளக்கினர். இதன் நினைவுநாள் குறித்து திராவிடநாடு பத்திரிகைக்கு ரூ. 1. நன்கொடை அளிக்கப்பட்டது."

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.

END OF
ISSUE